25th July 1964]

கிறார்கள். துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோருகிறார். அதிலே ஒரு சிக்கல் என்னவென்று சொன்னால், என்க்ரோச்மெண்டு. அம்மாதிரி இல்லாவிட்டால் கஷ்டமாக இருக்காது.

திரு. மீ. கலியாணசுந்தரம்: எனக்ரோச்மெண்டு அல்ல.

குழந்தை உணவு தொழிற்சாலை

*704 **கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர்:**
திரு. கரு. சீமைச்சாமி: } கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகையில் குழந்தை உணவு தொழிற்சாலை (Baby Food Factory) நிறுவும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தினந்தோறும் குறைந்த பட்சம் 10,000 லிட்டர் பால் உபரியாகக் கிடைத்தால்தான் "Bady Food Factory" ஏற்படுத்த இயலும். தற்போது இவ்வளவு உபரி பால் கிடைக்காததால் இத்திட்டத்தை அமுலாக்க இயலாது.

திரு. டி. கார்ச்சா கவுடர்: இப்பொழுது ஊட்டியிலிருந்து ஏறக் குறைய 4,000 லிட்டர் பால் லாரி மூலம் சென்னைக்கு வந்து கொண்டிருக்கிறது. பால் அங்கே விற்பனையாகாத காரணத்தினால் ஏராளமான கறவை மாடுகள் மைசூர் மாகாணத்தில் விற்கப்படு கின்றன. இந்த நிலையைத் தடுப்பதற்கு, புனர்ப் பரிசீலனை செய்து, 'பேபி புட் பாக்டரியை' அங்கேயே ஏற்படுத்துவதுபற்றி ஆலோசிப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: வேண்டிய 'ரா மெடீரியல்ஸ்' இல்லாத காரணத்தினால், அங்கே வைப்பதுபற்றி புனர் பரிசீலனை செய்வதற்கு இடமே இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம்: நம்முடைய நாட்டில் குழந்தை உணவு மிக அவசியமாக தேவைப்படுகிற ஒன்றாகும். கிட்டத்தட்ட நீலகிரி சீதோஷ்ண ஸ்திதி மாதிரியே அமைந்திருக்கிற ஸ்காண்டி நேவியாவில் கறவை மாடுகள் அதிகமாக இருக்கின்றன. அதுபற்றி பரிசீலனை செய்து, அங்கு இருக்கக்கூடிய மாடுகள் போன்றவை களைத் தருவித்து, இங்கு ஒரு 'டெய்ரி பார்ம்' ஏற்படுத்தி குழந்தை உணவு உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்து அம்மாதிரி ஒரு திட்டத்தை நான்காவது ஐந்தாண்டு திட்டதிலா வது தயார் செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்தக் கேள்வியை அந்த இலாகா மந்திரி அவர்களுக்குப் போட வேண்டும். இது 'அனிமல் ஹஸ்பண்டரி'யைச் சேர்ந்தது.

[25th July 1964

திரு. ஜே. மாதா கவுடர் : உதகையிலேயே ஏற்படுத்தாத நிலையில் நம்முடைய ராஜ்யத்தில் வேறு எங்கேயாவது இம்மாதிரி தொழிற்சாலை ஏற்படுத்தி, உதகையிலிருந்து பாலை அங்கு கொண்டு செல்வதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சிறிய அளவில் கோவைக்கு அருகாமையில் அமைப்பதற்குத் தனியார் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : குழந்தை உணவு தயாரிப்பதற்கு, வெளி நாட்டுக் கம்பெனியார் இம்மாதிரி தொழிற்சாலை நடத்துவதற்கு முன்வந்தார்கள் என்பது உண்மையா ?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன்: சற்றேறக்குறைய 10 வருஷங்களுக்கு முன்பு பாரி அண்டு கம்பெனியார் இதைச் செய்யலாமா என்று பரிசிலனை செய்து பார்த்து, 'இயலாது' என்று விட்டுவிட்டார்கள். ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு 'பாக்ஸ்டெல் கோ-வாபரடிவ் சொஸைடி' டென்மார்க், பரிசிலனை செய்து பார்த்துவிட்டு, அவர்களும் 'இயலாது' என்று போய்விட்டார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : சிறிய அளவிலே கோவைக்கு அருகாமையில் ஒரு பாக்டரி ஏற்படுத்தலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த மாநிலத்திற்கே நீலகிரி ஜில்லா ஒரு குழந்தை மாதிரி இருப்பதினால், குழந்தை உணவு பாக்டரி அங்கே வருமா என்று எதிர்பார்த்தார்கள். அது இல்லாமல் போய் விட்டது. இம்மாதிரி சிறிய பாக்டரியையாவது நீலகிரியில் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனியார் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன்.

Thennal Project

* 705 *Q.*—Sri K. M. KRISHNASWAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) when the construction of the proposed Thennal Project near Kappiyambuliyur in Valavanur Constituency will be started;

(*b*) whether plans and estimates for the same have been prepared; and

(*c*) the estimated cost thereof?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) No scheme is proposed to be taken up, near Kappiyambuliyur village in Valavanur Constituency. But there is a proposal by name " Thennal Project " near Kumulam village in Villupuram taluk of South Arcot district. The scheme is under contemplation and guagings are being conducted. conducted.

(*b*) Plans and estimates for the scheme have not been prepared.

(*c*) Does not arise.